வகுப்பறை உரையாடல்

வகுப்பறையில் பேச்சுத் தமிழை ஊக்குவிக்கும் முகமாக மாணவர்கள் தாம் விரும்பும் ஒரு விடயம் தொடர்பாக வகுப்பறையில் சக மாணவர்கள் முன் உரையாட வேண்டும். இவ் உரையாடலைத் தயார்ப்படுத்துவதற்கு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். மாணவர்கள் கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களிலிருந்தோ அல்லது அவர்களுக்கு விரும்பிய ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாகவோ உரையாடலாம். இவ் உரையாடலிற்கு மாணவர்கள் தாம் பேசும் விடயம் தொடர்பான படங்களையோ, சிறிய பொருட்களையோ பயன்படுத்தலாம்.

குறிப்பு: *மாணவர்களை மனனம் செய்யாது நடைமுறையில் உரையாடும் வகையில் அவர்களை தயார் படுத்தவும். இத் திட்டதினூடாக தமிழ் மொழியை புலம்பெயர்ந்து வாழும் நம் குழந்தைகள் தொடர்ந்தும் பேச வேண்டும், அதனூடாக அவர்கள் தமிழை உயர்தரத்தில் ஒரு பாடமாக எடுக்க உதவ வேண்டும் என்பதே நோக்கமாகும்.*

இல.	வகுப்பு	நேர அளவு	உதாரண தலைப்புக்கள்
1	முன்பள்ளி	2 - 3 நிமிடங்கள்	*எனது குடும்பம் *எனது செல்லப் பிராணி *எனது வீடு *என் அம்மா (அப்பா/ பாட்டி/ தாத்தா .....) *நான் உண்ணும் உணவு * விரும்பிய கதை *எனது பிறந்தநாள் விழா * தமிழ்ப் பண்டிகை
2	ஆரம்பப்பள்ளி		
3	ஆண்டு 1		
4	ஆண்டு 2	2 - 3 நிமிடங்கள்	*எனது குடும்பம் *எனது செல்லப் பிராணி *என் நண்பர் *நான் உண்ணும் உணவு *பாரதியார் *எனக்குப் பிடித்தவர் *விரும்பிய கதை *எனது பிறந்தநாள் விழா * தமிழ்ப் பண்டிகை
5	ஆண்டு 3		
6	இணைப்பு வகுப்பு		
7	ஆண்டு 4	3 - 4 நிமிடங்கள்	*தமிழர்கள் *எனக்குப் பிடித்த விளையாட்டு *தமிழ் மொழி *எனது தமிழ்ப் பாடசாலை *நாம் உண்ணும் உணவு *விரும்பிய கதை *நான் பார்த்த விழா *அவுஸ்திரேலியா *எனக்குப் பிடித்த தமிழ்ப் பெரியார் (பாரதியார் ...) * தமிழ்ப் பண்டிகை
8	ஆண்டு 5		
9	புகுநிலை வகுப்பு		
10	ஆண்டு 6	3 - 5 நிமிடங்கள்	*தமிழர்கள் *தமிழ் மொழி *நாம் உண்ணும் உணவு *இன்றைய இளைஞர்கள் *தமிழர்களது பாரம்பரிய உடைகள் *தாய் நாட்டிற்கு பயணம் செய்த அனுபவங்கள் *எனக்குப் பிடித்த தமிழ்ப் பெரியார் (பாரதியார் ..) * தமிழ்ப் பண்டிகை *தமிழ் நூல் ஒன்று *நான் ரசித்த விழா *எனது தமிழ்ப் பாடசாலை *நாம் ஏன் தமிழ் கற்க வேண்டும் *எனது இலட்சியம் *அவுஸ்திரேலியாவின் இயற்கை அழகு *அவுஸ்திரேலியா
11	ஆண்டு 7		
12	ஆண்டு 8		
13	ஆண்டு 9-12 HSC	பிரதான பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது	